# முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2023 ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.1004/2021

வா.சா.1 நல்லசாமி

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எனக்கு முக்கியத் தொழில் என்னவென்றால் விவசாயம் மற்றும் மாடுகள் வைத்து பால் வியாபாரம் செய்து வருகிறேன். பிரதிவாதியை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் பிரதிவாதி பக்கத்து ஊர்க்காரர் அந்த வகையில் 6,7 வருடமாக தெரியும். எனக்கு 3 ஏக்கர் விவசாய பூமி உள்ளது. அதில் கரும்பு, குச்சி பயிர் செய்கிறேன். குச்சி கிழங்கு வர பூமியில் தான் வளரும் என்றும், தண்ணீர் பாய்ச்சினால் வளராது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எப்போது பணம் கொடுத்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிக்கு 16.02.2020 தேதியில் பணம் கொடுத்தேன். பணம் கொடுத்த பிறகு பிரதிவாதி வட்டி எதுவும் செலுத்தவில்லை. நான் வழக்கு தாக்கல் செய்வதற்காக 2020 ம் வருடம் 1 ம் மாதத்தில் வழக்கறிஞரை சந்தித்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக பிரதிவாதிக்கு வழக்கு அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஏன் சட்ட அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் பிரதிவாதியிடம் பல முறை பணம் கேட்டும் கொடுக்காததால் சட்ட அறிவிப்பு கொடுக்கவில்லை. நான் பலமுறை பிரதிவாதியிடம் பணம் கேட்டேன் என்பதற்கு எழுத்துமூலமான ஆவணம் இல்லை என்றால் சரிதான்.

வா.த.சா.ஆ.1 ஆவணத்தை சதீஸ்குமார் என்பவர் எழுதினார். வா.த.சா.ஆ.1 ஆவணம் எழுதுவதற்கான புரோ நோட், ஸ்டாம்பு ஆகியவற்றை யார் கொண்டு வந்தார் என்றால் பிரதிவாதி தான் கொண்டு வந்தார். பிரதிவாதிக்கு நான் பணம் கொடுத்த போது யார் உடன் இருந்தார்கள் என்றால் நானும், என் மனைவியும் மற்றும் சதீஸ்குமார், சசிக்குமார் ஆகியோர்கள் உடன் இருந்தார்கள். சதீஸ்குமார், சசிக்குமார் ஆகியோர்கள் எனக்கு உறவினர்கள் இல்லை, அவர்கள் மாடு வாங்குவதற்காக வந்தவர்கள். மாடு வாங்க வந்தவர்கள் புரோ நோட் எழுதும் விபரம் எப்படி தெரியும் என்றால் குணசேகரன் புரோநோட் எழுதிக் கொடுக்கச் சொன்னார், அதன் பேரில் எழுதிக் கொடுத்தார்கள்.

புரோநோட் எழுதிய அன்று தமிழ் மாதம் என்னவென்றால் மாசி மாதம் 4 ம் தேதி ஆகும். மேற்படி தேதியை காலண்டரை பார்த்து தெரிந்து கொண்டேன். பிரதிவாதி சார்பாக அனுப்பப்பட்ட அறிவிப்பை பெற்றுக் கொண்டேன். பிரதிவாதி வழக்கு அறிவிப்பு கொடுத்த பிறகு தான் அதற்கு மறுப்பு தெரிவித்து பிரதிவாதி வழக்கறிஞருக்கு பதில் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் பதில் அறிவிப்பு கொடுத்த பிறகு தான் பிரதிவாதிக்கு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விபரம் தெரியும் என்றால் சரிதான். வழக்குரையில் சொல்லியுள்ளவாறு பிரதிவாதி என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், வழக்கு கடன் உறுதிச்சீட்டு மேற்படி கடனுக்கு பிரதிவாதியால் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கொடுத்த 30.09.2021 தேதியிட்ட வழக்கு அறிவிப்பில் கூறியுள்ள படி 25.03.2002 தேதி ஒரு அவசர தேவைக்காக ரூ.17,500/- தங்களிடம் கடன் பெற்றதாகவும், அதற்காக பூர்த்தி செய்யப்படாத கையெழுத்து மற்றும் கைரேகை செய்யப்பட்ட மூன்று புரோநோட்டுகள், கையெழுத்து மற்றும் கைரேகை செய்யப்பட்ட ரூ.20/-க்கான முத்திரைத்தாள் மூன்றும் பூர்த்தி செய்யப்படாத பச்சை பேப்பரில் கையெழுத்து, கைரேகை செய்யப்பட்ட மூன்றும் பெற்றுள்ளேன் என்றும், கடந்த 02.05.2006 தேதி அன்று வட்டியுடன் பிரதிவாதி ரூ.18,000/-ம் செலுத்திவிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. 2021 ம் வருடம் 7,8 மாதத்தில் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட மிகுதியான விஸ்தீரணம் கொண்ட பூமியை விற்பனை செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு விற்பனை செய்த சமயத்தில் எனக்கு ரூ.50,000/-ம் பணம் வரவேண்டியுள்ளது என்றும், அதை தரமறுக்குபட்சத்தில் பிரதிவாதி மீது ரூ.1,25,000/-த்திற்கு வழக்கு போடுவதாக மிரட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு 500/- ரூபாய் நோட்டுகள் 250 தாள்கள் கொடுத்தேன். மேற்படி பணம் எனக்கு கரும்பு போட்ட வகையில் கிடைத்ததாகும். கரும்பு வெட்டியதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் தனியார் மூலம் வெட்டியதால் ஆவணம் இல்லை. வா.த.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள தேதியில் என்னிடம் பணம் இருந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, கரும்பு பணம் கையில் இருந்தது. பிரதிவாதிக்கும் எனக்கும் இருந்து வந்த வரவு செலவானது 2002 -ம் வருடம் தொடங்கி 2006 ம் வருடம் முடிந்து விட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கொடுத்த வைத்திருந்த ஆவணங்களை திரும்ப கேட்ட போது நான் பின்னர் தருவதாக சாக்கு போக்கு சொல்லி தராமல் இருந்து வந்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு கொடுத்த புரோநோட்டை தாக்கல் செய்தால் அது பழைய புரோநோட் என்பது தெரிந்துவிடும் என்பதால், அதை பார்த்து வா.த.சா.ஆ.1

புரோநோட்டை நானே தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை பிரதிவாதியுடையது அல்ல என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 புரோநோட்டை ஆய்வுக்கு அனுப்பவதற்கு எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. 16.02.2020 தேதியில் பிரதிவாதிக்கும், எனக்கும் எவ்வித வரவு செலவு நடக்கவில்லை என்றும், வா.த.சா.ஆ.1 புரோநோட் மோசடியானது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

**மறு விசாரணை:-** இல்லை.